IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.137/2023

Deposition of Witness for PW1.

Name : திருமதி.லொரேட்டா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். எனது தகப்பனார் லுயிஸ் பெயரில் உள்ள 21.09.1984 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம்அசல் வா.சா.ஆ–1, எனது சித்தப்பா மார்க் பெயரில் உள்ள அதே தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ–2, 12.03.1993 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–3, 17.11.2017 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள நிலவரி ரசீது அசல் வா.சா–ஆ–4, 03.11.2015 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள நிலவரி ரசீது அசல் வா.சா–ஆ–5, 13.11.2015 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ–6, 18.11.2015 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ–7, 20.11.2015 தேதியிட்ட எனது சகோதரர் ரெஜிஸ் பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–8, 10.06.2023 தேதியிட்ட நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் ஒளி நகல் வா.சா.ஆ.9, ( ஒளிநகல் என்பதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.